**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 72 of 2022

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : நாகராஜன்

Father's Name : பரசுராமன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது தமிழ்நாடு வனத்துறையில் வனக்காப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்பொழுது வந்தவாசியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.09.2019ம் தேதியன்று சூலூர், பிள்ளையார் கோவில் தெரு, செந்தில் நகரில் கருணாமூர்த்தி என்பவர் வீட்டில் பவளப்பறைகள் இருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்து நான் திருமதி. சாரம்மாள் வனவர் மற்றும் வனக்காப்பாளர் திரு.ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் மாலை 05.00 மணியளவில் செந்தில் நகரில் உள்ள கருணாமூர்த்தி என்பவர் வீட்டிற்கு பொருள் வாங்க சென்று பார்த்தபோது பவளப்பாறைகள் இருப்பதாக கூறி கருணாமூர்த்தி பவளப்பாறைகள் இருப்பதை காண்பித்தார்.

2. மேலும் சம்பவ இடத்தில் வனவர் சாராம்மாள் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். மேலும் அதே இடத்தில் ஸ்தல மகஜர், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அதில் நானும் ஜெயபிரகாஷ் என்பவரும் சாட்சிக்கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரி மற்றும் வாழ்க்கு சொத்துடன் மாவட்ட வன அலுவலகம் சென்று மாவட்ட வன அலுவலர் அவர்களிடம்

ஒப்புவித்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையொப்பம் செய்த ஆவணங்களை படித்து பார்த்த பின்பு தான் கையொப்பம் செய்தேன். நான் முதல் விசாரணையில் வனவர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லி உள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வனச்சரக அலுவலர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் ஜெயபிரகாஷ் என்பவர்தான் பதிவு செய்தார் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் பாறைகள் 6 எண்ணிக்கை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கான கலர் எதுவும் குறிப்பிடவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் வனவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மாவட்ட வனச்சரக அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.17 20:01:59 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**